செய்தி வெளியீடு எண்: 364 நாள்: 22.06.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 21.6.2019 அன்று தலைமைச் செயலகத்தில், சமூகப் பாதுகாப்புத் துறையின் சார்பில் மதுரை, அரசினர் கூர்நோக்கு இல்ல வளாகத்தில் 6 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுவர் மற்றும் சிறுமியருக்கான கூர்நோக்கு இல்லக் கட்டடங்கள், புனரமைக்கப்பட்ட இளைஞர் நீதி குழுமக் கட்டடம் மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த கூர்நோக்கு இல்லத்தில் உள்ள சிறார்களின் நலனைக் கருத்திற் கொண்டு, அரசே ஏற்று நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 2015–ஆம் ஆண்டு சமூகப் பாதுகாப்புத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

மேற்படி கூர்நோக்கு இல்லம் இயங்கி வந்த கட்டடங்கள் மிகவும் பழுதடைந்து இருந்த காரணத்தினால், சிறார்களின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு இல்ல வளாகத்தில் புதிய கட்டடங்கள் கட்ட 6 கோடியே 4 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, மதுரை அரசினர் கூர்நோக்கு இல்ல வளாகத்தில் 75 சிறுவர்கள் மற்றும் 25 சிறுமியர்கள் தங்கும் வகையில் துயிற்கூடங்கள், உணவருந்தும் கூடங்கள், வகுப்பறைகள், பணியாளர் அறைகள், நூலகங்கள், பொழுதுபோக்கு அறைகள், மருத்துவ அறைகள், கழிவறைகள், குளியலறைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 5 கோடியே 54 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறுவர் மற்றும் சிறுமியருக்கான கூர்நோக்கு இல்லக் கட்டடங்கள் மற்றும் 49 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட இளைஞர் நீதி குழுமக் கட்டடம் மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.ஆர். லால்வேனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**